**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.4/2025**

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேஷ் | ஜாதி | : | |
| த.பெ | : | விஜய்சேகர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கல்லுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 47/2026 |
| தேதி | : | 20.04.2026 | | | |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் இந்த வழக்கில் 6ம் பிரதிவாதி ஆவேன். வாதியின் தாயார் பெயர் பாப்பா, தந்தை பெயர் லிங்கையன் ஆகும். வாதியின் உடன்பிறந்தவர்கள் 5 பேர் ஆகும். இறந்த எனது தாயார் கனிமொழி , பி. சுமதி. புகழேந்தி, சாந்தி, ராஜேஷ்கண்ணன் ஆகியோர்கள் ஆவார்கள். என் தாயார் இறந்ததால் என்னை வாரிசாக சேர்த்துள்ளார்கள். என் தங்கை மகாலெட்சுமி என்பவரையும் இவ்வழக்கில் வாரிசாக சேர்த்துள்ளார்கள். வாதி அவருடைய பாட்டி பெயரில் உள்ள சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அய்யம்பாளையம் கிராமம், சர்வே எண்.544/4 1979 ல் என்னுடைய தாத்தா, பாட்டி கிரையம் செய்து கொடுத்தார்கள். ஜெயக்கொடி என்பவருக்கு அந்த கிரையத்தை செய்து கொடுத்தார்கள். வாதி விவசாயம் செய்து வந்தார். அதனுடன் போர் வண்டி வைத்து தொழில் செய்து வந்தார். 1980 ல் எங்கள் தாத்தா, பாட்டி கிரையம் கொடுத்த சொத்தை மீண்டும் மறு கிரையம் செய்து கொண்டார்கள். என் பாட்டி 1ம் பிரதிவாதி பெயரில் மறுபடியும் கிரையம் வாங்கினார். அந்த சொத்தை பொதுவாக நாங்கள் அனுபவித்து வந்தோம். மேற்படி தகவல்கள் அனைத்தும் என்

அம்மா எனக்கு சொன்னதால் எனக்கு தெரியும். என் தாயார் 15.02.2019 அன்று இறந்துவிட்டார்.

தாவா சொத்தின் சர்வே எண்.346/2 என்று நினைக்கிறேன். தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வருவது என் அம்மா சொல்லியும், என் தாத்தா மற்றும் பாட்டி வந்து செல்லும் போதும் நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தை 3ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் செய்தது குறித்து எனக்கு அழைப்பாணை வந்ததற்கு பிறகு தெரியும். தாவா சொத்தை பொதுவாக தான் அனுபவித்து வருகிறார்கள்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor